அல்லது ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவராக இருந்து, தான் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்தான் என்று சொல்லு மானால், அந்த வகுப்பு குறிப்பிடப்பட வேண்டுமென்ற அளவுக்கு ஆணை திருத்தப்பட்டு அந்த அடிப்படையிலே ஆங்காங்கே குறிப்பு கள் தரப்பட்டிருக்கின்றன.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு வேலையில் முன்னுரிமை தரப்படும் என்று சொன்னார்கள். வேலை அளிக்கின்ற நேரத்தில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு 18 சதவீதம், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 50 சதவீதம் என்று ஒதுக்கீடு செய்து விட்டு, மீதியெல்லாம் ஓ. சி. என்று வைத்துவிட்ட காரணத்தாலே, இவர்களுக்கு எந்த விகிதத் தில் ஒதுக்கீடு இருக்கிறது? பிற்பட்ட சமுதாயத்தில் இருக்கிற ஒதுக்கீடா அல்லது மற்ற கம்யூனிட்டியில் வருகிறதா, அல்லது தாழ்த்தப்பட்டவர்களில் வருகிறதா, எந்தப் பிரிவில் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஒதுக்கீடு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதற்கென்று தனி ஒதுக்கீடு இல்லை. ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு 5 இடங்கள் இருந்து, 500 பேர்கள் விண்ணப்பித்திருப்பார்களானால், அந்த 500 பேர் களிலே கலப்பு மணம் செய்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஊட்டியில் கூட்டுறவு மத்திய வங்கிக்கு புதிய கட்டிடம்.

42—(*வினா எண் 9358) திரு கே. உச்சி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊட்டியில், கூட்டுறவு மத்திய வங்கிக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள கட்டிடத்தை இடித்து விட்டு புதிய கட்டிடம் கட்ட வங்கி நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் புதிய கட்டிடத்திற்கு எவ்வளவு தொகையில் எஸ்டிமேட் தயாரிக் கப்பட்டுள்ளது ? அந்த வேலைகள் துவக்கப்பட்டுள்ளனவா ? கடந்த 8–10–1986 அன்று அதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. வேலை எப்பொழுது துவக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

1987 மார்ச் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நடைபெறுகின்ற மத்திய கூட்டுறவு வங்கி, 1954-லிருந்து அங்கே நடைபெற்று வருகிறது. அதனை விரிவு செய்து, வேறு பல வசதிகளைச் செய்வதற்கு மேல் மாடி கட்டலாமா என்று யோசித்த நிலையில், இப்பொழுது இருக்கிற கட்டிடம் தாங்காது என்ற நிலை ஏற்பட்டபொழுது அதை இடித்து விட்டு, புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூ. 50 இலட்சம் மதிப்பீடு தொகை ஆகும் என்று சொன்ன நிலையில், இப்பொழுது உடனடியாக அதைச் செய்ய வேண்டும் என்ற நிலையில், தற்போது ஒரு மாடியுடன் கூடிய புதிய கட்டிடம் கட்ட ரூ. 50 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு கட்டுமான மேற்பார்வைப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு, வங்கியின் கட்டிட நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் போக, எஞ்சிய ரூ. 45 இலட்சம், தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து, கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து கடனாகப் பெற முடிவு எடுக்கப்பட்டு, மத்தியக் கூட்டுறவு வங்கியின் முன் மொழிவு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கடன் அனுமதித்த பின்னர் கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்படும். ஆகவே மத்திய வங்கியிலிருந்து ரூ. 5 இலட்சமும், கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து பெறப் போகிற ரூ. 45 இலட்சமும் சேர்த்து, ரூ. 50 இலட்சத்திலே கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-10).

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நான் ஏற்கனவே கேட்டிருக்கிறபடி பழைய கட்டிடம் காலியாக இருக்கிறது. அங்கே புதிய கட்டிடம் கட்டும் பணி எப்போது தொடங்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியக் கட்டிடம் கட்டும் பணி அனுமதி பெற்ற பின்னால் தொடங்கப்படும் என்று விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. கடன் அனுமதிக்கப்படுகிற நிலைமையைப் பொறுத்திருக்கிறது. அதன் பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. கல்லன் : தலைவரவர்களே, அந்தக் கட்டிடம் உதகையின் மையப் பகுதியில் இருக்கிறது. பல அலுவலர்கள் அங்கே அமர்ந்து பணியாற்றக் கூடிய அளவுக்கு வசதி இல்லை ; சிறியதாக இருக்கிறது. ஆகவே, பெரிய கட்டிட ாக ஒன்று கட்டி, மற்ற அரசு அலுவலகங்களுக்கும் போதுமான இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 2, 3 மாடி கட்ட வேண்டுமென்றால், முதல் கட்டமாக முதல் மாடி கட்டப்பட வேண்டும். அதற்கு 50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, 5 இலட்சம் ரூபாய் வங்கியிலிருந்து பெற்று, 45 இலட்சம் ரூபாய் கடனாகப் பெற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் அனுமதி பெற்று கட்டுமானப் பணி தொடங்கப்பட இருக்கிறது என்று முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டம், அரூர் தாலுகாவை இரண்டாகப் பிரித்தல்

43—(*வினா எண். 9592) திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) தர்மபுரி மாவட்டம் அரூர் தாலுகாவை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பிரிக்கப்படும் பகுதிக்கு பாபிரெட்டிபட்டி தாலுகா தலைமை இடமாக ஏற்படுத்தப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இச்செயற் குறிப்பு தற்போது வருவாய் நிருவாக ஆணையரின் ஆய்விலுள்ளது. அது இன்னும் அரசுக்கு வர வில்லை.

(ஆ) வினாவிற்கு இப்பொழுது இடமில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவரவர்களே, நம்முடைய அரசு பெரிய மாவட்டங்களையும் பெரிய வட்டங்களையும் பிரித்து அமைப்பதான ஒரு புதிய கொள்கையை, நல்ல கொள்கையை வைத்திருக்கிறது. இன்றைக்கு தர்மபுரி மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிறது. சில வட்டங்களும் பெரிதாக இருக்கின்றன. இப்போது சில வட்டங்களை இரண்டாகப் பிரிக்கும் நேரத்தில், சித்தேரி, தும்பை போன்ற மலைப் பகுதிகளை உள்ளடக்கி இருக்கிற பெரிய வட்டமான அரூர் தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு ஆய்வு செய்வதோடு, அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் தக்க ஆணையும் பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து பாபிரெட்டிபட்டி வட்டம் அமைக்கும் செயற்குறிப்பு